# கொழும்பில் நடைபெற்ற இந்து சமுத்திர மாநாடு 2017ல் மேஜர் ஜெனரல் ஜேம்ஸ் எஸ். ஹார்ட்செல் ஆற்றிய உரை

மாலை வணக்கம் சீமான்களே மற்றும் சீமாட்டிகளே, அமெரிக்க பசுபிக் கட்டளைப்பீட தளபதி அட்மிரல் ஹரிஸ் சார்பாக கலந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். அவர் இம் மாநாட்டில் கலந்து கொள்ள முடியாமை தொடர்பாக வருத்தத்தை தெரிவித்துள்ளதுடன், தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களுக்கும், மற்றும் சபைக்கு தலைமை தாங்கும் இலங்கைப்பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் இந்த கலந்துரையாடலை ஏற்பாடு செய்ய மேற்கொண்ட அயராத முயற்சிகளுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ச்சியாக பிணைப்புகள் அதிகரித்து வரும் இவ்வுலகில், நாம் முகம்கொடுக்கக் கூடிய சவால்களை கூட்டு இணக்கத்துடன் மேற்கொள்ளும் தீர்வுகள் மூலமே எதிர்கொள்ள முடியும். உடனடிச் செய்திகள் மற்றும் கருத்துக்கள் மூலம் மேலோட்டமாக பிரச்சினைகளை ஆராயும் இக்கால கட்டத்தில், இத்தகைய அமர்வானது பிரச்சினைகள் பற்றி ஆழமாக ஆராய்வதற்கு உதவி செய்கின்றது.

இந்து சமுத்திரப் பிராந்தியம் மூலோபாய ரீதியில் மிக முக்கியமானது என்பதை இங்கு கூடியிருக்கும் எவரும் மறுக்க மாட்டார்கள். கிழக்கு ஆசியா, அரேபியத் தீபகற்பம், கிழக்கு மற்றும் தென்னாபிரிக்கா போன்ற வர்த்த மையங்கள் பருவக்காற்று மூலம் இணைக்கும், கடற்பயணங்கள் ஆரம்பிக்கும் காலத்திற்கு முன்பிருந்தே இம்முக்கியத்துவம் உள்ளது. இன்று, உலகின் பாதி கொள்கலன் பரிமாற்றம், மூன்றில் ஒரு பங்கு பேரளவு சரக்கு, ஏறத்தாள மூன்றில் இரண்டு பங்கு உலகளாவிய கடல்வழி எரிபொருள் விநியோகம் ஆகியன இந்தப் பிராந்திய கடல் மூலமே மேற்கொள்ளப்படுகின்றது. இவ் வர்த்தகம் தொடர்பான பாதுகாப்பு காரணிகள் மிக முக்கியமாகும்.

பிரதான கடல் வர்த்தக மார்க்கத்தில் அருகே அமைந்துள்ள இந்து சமுத்திர பிராந்தியம், பூகோள ரீதியில் உள்ளே மற்றும் வெளியே அமைந்துள்ள நாடுகளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதுடன்; உலகின் மூன்று பிரதான வர்த்தக நாடுகளில் இரண்டான சீனா மற்றும் ஜப்பான் நாடுகளுக்கும், ஏனைய இப்பிராந்தியம் மூலம் கடல் வர்த்தகம் மற்றும் வளங்களில் ஆர்வமுடைய நாடுகளுக்கும் போட்டி மற்றும் கூட்டுறவு நிலைமைகளை ஏற்படுத்துகின்றது.

சர்வதேச சட்டங்கள் மற்றும் நியமங்களை பின்பற்றுதல், எமது பரஸ்பர மரியாதை, சட்டத்திற்கு இசைவாக செயற்படல் மூலம் இந்து-ஆசிய-பசுபிக் வர்த்தகம் செழிப்படைந்ததுடன், இந்த நவீன காலத்தில் நீண்ட கால அமைதி மற்றும் விருத்தி நிலையை அடைந்துள்ளது.

இந்த 70 ஆண்டு காலத்திற்கு மேற்பட்ட பிராந்தியப் பாதுகாப்பு மற்றும் ஸ்தீரணத் தன்மை தாமாக ஏற்பட்டது இல்லை. மாறாக கொள்கைசார்ந்த, சிறிய அல்லது பெரிய நாடுகளுக்கு பொதுவான சட்டங்களுக்கு உட்பட்ட, கூட்டு அர்ப்பணிப்பே காரணமாகும். அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் மற்றிஸ் கடந்த மாதம் ஷங்ரி-லா கலந்துரையாடலில் குறிப்பிட்டது போன்று "சர்வதேச சட்டங்கள் குறித்த ஒரு நாட்டுக்காக உருவாக்கப்பட்டது அல்ல. மாறாக மேம்பட்ட உலகை உருவாக்கவும், அனைவருக்கும் நம்பிக்கை ஏற்படுத்தக் கூடிய வகையிலும், அனைத்து நாடுகளும் ஏற்றுக்கொள்ளக் கூடிய கொள்கைகளின் அடிப்படையில் சட்டங்கள் உருவாக்கப்பட்டன". கடந்த ஏழு தசாப்த காலப்பகுதியில் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட மக்களின் வறுமையைப் போக்குவதற்கு உதவிய விதிகளை-அடிப்படையாகக் கொண்ட சர்வதேச சட்டங்கள், சுதந்திரமான இராணுவ மற்றும் சிவில் கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து, பிரச்சினைகளுக்கு அமைதிவழித் தீர்வு, தங்கு தடையற்ற சட்டரீதியான வர்த்தகம் உள்ளடங்கலான கொள்கைகள் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.

இச்சட்டத்தின் மூலம் அதிகளவு பயனைப் பெற்ற நாடுகளினாலேயே இப்பொறிமுறை தொடர்ச்சியாக ஏற்றுக்கொள்ளப்படும் தன்மை சவாலுக்குட்படுத்தப்பட்டுள்ளது. துரதிஷ்டவசமாக சில நாடுகள், சர்வதேச கட்டமைப்பு மற்றும் பாதுகாப்புப் பொறிமுறைகளுக்கு அடிப்படையாகவுள்ள இயல்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டமைப்பு, நியமம், மற்றும் சட்டங்களை ஏற்றுக்கொள்ள மறுப்பதுடன், தன்னிச்சையான பாதையில் பயணிக்க விளைகின்றன.

இத்தகைய நிலைமாற்றத்தை தென் சீனக் கடலில் காணலாம். கடல்சார் நியதிகள், மற்றும் சர்வதேச அதிகாரசபையின் தீர்மானங்களுக்கு புறம்பாக, சீனா தனது இராணுவ மற்றும் வர்த்தக பலத்தைப் பிரயோகித்து சுதந்திரமான கடல்வழிப் போக்குவரத்தை சீர்குழைத்து, விதிகள் அடிப்படையிலான சர்வதேச சட்டத்தை பலவீனப்படுத்துகின்றது. சர்ச்சைக்குரிய தென்சீனக்கடல் மற்றும் எல்லையில் இராணுவப் வலுப்படுத்தல் மற்றும் நிலைசார் அனுகூலங்களை கட்டமைப்பது, இப்பகுதியில் தமது இறையாண்மை அதிகாரத்தை எவ்வாறாயினும் வலியுறுத்த முனைவதனைக் காட்டுகின்றது. இராணுவ மயப்படுத்தப்பட்ட முகாம்களை உருவாக்குவதன் மூலம் பௌதீக மற்றும் அரசியல் நில அமைப்பை மாற்றுவதுடன், தூண்டுதலற்ற வலிந்த இத்தகைய செயற்பாடுகளை- கட்டுப்பாடின்றி செல்லும் மீனவர்களை பாதுகாக்கும் நடவடிக்கையாக நியாயப்படுத்தி பிரச்சாரம் செய்யப்படுகின்றது. அட்மிரல் ஹரிஸ் கூறியது போன்று, உண்மையான மக்கள் போலியான தீவுகளை நம்பக்கூடாது.

உள்நாட்டு சட்டங்களை சர்வதேச பகுதிகளில் வலிந்து திணிக்க முயல்வது வியப்பளிக்கவில்லை. அண்டைய நாடுகளில் அச்சம் மற்றும் நிச்சயமற்ற தன்மை அதிகரிப்பதுடன், நாட்டின் சுய பாதுகாப்பிற்கு தேவையான படையை விட அதிகமான கடற்படை கட்டமைப்பை உருவாக்க நாட்டின் பெருமளவு பொருளாதாரம் செலவழிக்கப்படுவதையும் காணலாம். சில நாடுகள் உலக நியதிகளுக்கு புறம்பாக இறையாண்மை அதிகாரத்தைக் கோருவது, ஏனைய நாடுகள் தடங்கலன்றி உலக நியதிகளை அணுகலை பாதிக்கும் எனக் கவலை அளிக்கின்றது. வளங்கள் மற்றும் இராணுவ வலிமை குறைந்த சிறிய நாடுகள் வேறு வழியின்றி தம் மீது திணிக்கப்படும் நிர்ப்பந்தங்களை ஏற்றுக்கொள்ளவும், தேசத்தின் உரிமைகளை விட்டுக்கொடுக்கவும் வேண்டி ஏற்படும்.

சுதந்திரமான கடற் போக்குவரத்து தொடர்பான பிரச்சினைகளை கையாளுவதில் நாடுகளின் ஒத்துழைப்பு கடல்சார்ந்த அதிகாரங்களையும் தாண்டியது. நாடுகள் சர்வதேச வான்வெளியிலும் கடலைப் போன்று ஆதிக்கம் செலுத்த முனைந்தால், விண்வெளி மற்றும் இணையம் போன்றவற்றிலும் உலக நியதிகள் இனி காக்கப்படும் என எண்ண முடியாது. இதற்கமைய ஐக்கிய அமெரிக்கப் படையினர் சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டு வான்வழி, கடல்வழி பயணங்களை மேற்கொள்வதுடன், உலகளாவிய ரீதியில் செயற்படுவதன் மூலம், அனைத்து நாடுகளுக்கும் வழங்கப்பட்ட சிறப்புரிமை குறிப்பிட்ட ஒரு நாட்டின் தேவைக்காக நசுக்கப்படாது இருப்பதனை உறுதி செய்கின்றனர்.

அமெரிக்கா மற்றும் சீனா இடையிலான கொள்கை முரண்பாடு காரணமாக இராணுவ மோதல் ஏற்படும் எனக் கூற வரவில்லை. மாறாக, அமைதியான கூட்டுறவு, சர்வதேச விதிகளுக்கு அமைவான சட்டமுறையில் அர்த்தமுள்ள பங்குபற்றுகை, சர்வதேச கடப்பாடுகளை மதித்தல் மூலம் சிறப்பான எதிர்காலம் அமையும் என சீனாவை இணங்க வைப்பதே எமது இலக்காகும். ஆனால் பகிரப்பட்ட அதிகாரங்கள் ஒருதலைப்பட்சமாக நிறுத்தப்படுவதனை ஐக்கிய அமெரிக்கா அனுமதிக்காது. ஆகவே முடியும் பட்சத்தில் இணங்கி செயற்படுவோம், தேவை ஏற்படும் போது எதிர்த்து நிற்போம்.

சீனா மற்றும் அமெரிக்காவினால் இணங்கி செல்ல முடியாத காரணிகள், இந்நாடுகள் இணங்கி செயற்படக்கூடிய காரணிகளின் முன்னேற்றத்தைப் பாதிக்கக்கூடாது என அட்மிரல் ஹரிஸ் பலதடவை குறிப்பிட்டுள்ளார். அமெரிக்கா மட்டுமன்றி, ஏனைய இந்து-ஆசிய-பசுபிக் நாடுகளும் இயலுமான விடயங்களில் சீனாவுடன் இணங்கி செயற்பட வேண்டும். இவ்விணக்கத்திற்கான அடித்தளத்தின் ஆரம்பம் மற்றும் முடிவு சர்வதேச சட்டங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

தென் சீனக் கடலை நான் உதாரணமாகக் காட்டுவது ஏனெனில், இவ்விடயம் பல ஆண்டுகளாக பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல்களில் பேசப்படுவதுடன், இந்து சமுத்திரத்தில் காணப்படும் கடல்சார் சர்ச்சைகளுக்கு தீர்வு தொடர்பான தற்போதைய நடைமுறைகளுக்கும் முரணாக உள்ளது.

இப்பிராந்தியத்தில், இந்தியா உட்பட, பல நாடுகள் வழமையான சர்வதேச சட்டங்களுக்கு நீண்டகால அர்ப்பணிப்பைக் காட்டி உள்ளன. பிரதமர் மோடி அவர்கள் "சுதந்திரமான போக்குவரத்தை மதிப்பதும், சர்வதேச சட்டத்திற்கு அமைய செயற்படுவதும், பூகோள ரீதியில் தொடர்புபட்ட இந்து-பசுபிக் பகுதியில் அமைதி மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாதது" எனக் குறிப்பிட்டார். "மிக முக்கியமாக, இதற்கான முன்னுதாரணம் இந்து சமுத்திரத்தில் சொல் மற்றும் செயல் மூலம் காண்பிக்கப்படுகின்றது".

கடல்சார் சட்ட சர்வதேச தீர்ப்பாயம் 2012ல் வங்காளதேசம் மற்றும் பர்மா இடையில் ஒரு சர்ச்சையை முடிவுக்குக் கொண்டு வந்தது. வளைந்த கரையோர எல்லையை கொண்ட வங்காளதேசம் கடல்சார் வளங்களை அணுகுவதனை பர்மா தடுக்க கூடாது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. இதற்கு சலுகையாக கடல்சார் சட்டங்கள் சர்வதேச தீர்ப்பாயம் கடற்படுக்கை வங்காளதேசத்திற்கு உரியதும், கடற்பரப்பு வர்த்தக வலயக் கட்டுப்பாடு பர்மாக்கு உரியதுமான 'சாம்பல் நிற பிரதேசம்' ஒன்றை உருவாக்கியது. இத்தீர்ப்பில் பர்மா கரையோரமாக உள்ள சென். மார்ட்டின் தீவினை குறித்த பிராந்திய கடற்பரப்பிற்கு உரித்தானதாகவும், வங்காளதேசம் பிரத்தியேக வர்த்தக வலயத்திற்கு வெளியே இத்தீவில் ஆதிக்கம் செலுத்த முடியாது என்றும் தீர்ப்பளித்தது. இரு சாராரும் இதன் மூலம் நன்மை அடைந்தனர்.

இரண்டு ஆண்டுகளின் பின், இந்தியா மற்றும் வங்காளதேசம் இடையிலான நீண்ட கால சர்ச்சையை நிரந்தர மத்தியஸ்த மன்றம் தீர்த்து வைத்தது. இது வங்காளதேச மேற்கு கரையோர எல்லை பற்றியதாகும். மத்தியஸ்த மன்றத்தினால், வங்காளதேசத்திற்கு அவர்கள் கோரிய வர்த்தக பிரத்தியேக வலயத்தின் எண்பது வீத உரிமை வழங்கப்பட்டது. குறிப்பாக, இந்தியா பரந்த நிலப்பரப்பு மற்றும் வல்லாதிக்க நாடாக இருந்த போதும், இந்த தீர்ப்பை ஏற்றுக்கொண்டது. ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையில் சமரச தீர்வுகளை எட்டுவதற்கும், தீர்ப்புகளுக்கு மதிப்பளிக்கவும் இந்தியா காட்டும் முன்மாதிரி, பிராந்திய தலைமை நாடு என்ற வகையில் பிராந்திய பாதுகாப்பு மற்றும் ஸ்தீரத்தன்மையை ஏற்படுத்துவதுடன் ஏனைய பிரச்சினைகளுக்கான கூட்டுறவு இணக்கத்திற்கான அடித்தளத்தையும் உருவாக்கும்.

இந்த இணக்க முறையானது அதிகரித்த சவால்களுக்கு, முறையான மற்றும் உள்ளார்ந்த தீர்வுகள் எட்டும் சூழலை உருவாக்கும். எங்களை பல்வேறு வழியில் இணைப்பதுடன், நாட்டின் செழிப்பு மற்றும் மேம்பட்ட வாழ்க்கைமுறைக்கும் வழிவகுக்கும் அதே சமுத்திரமே, அரசாங்கம் சாராத தரப்பினர் சுய இலாபத்திற்காக சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடவும் வழி விடுகின்றது. இவ்வாறான ஒரு மாற்றமாக, இந்து சமுத்திரம் உட்பட இந்து-ஆசிய-பசுபிக் கடலின் சில பகுதிகளில் கடற்கொள்ளையர்கள் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

நீண்ட காலமாக மேற்கு இந்து சமுத்திரத்தில், கடற்கொள்ளை மற்றும் ஆயுதக்கொள்ளை காரணமாக சோமாலியா நாட்டுக்கான மனிதாபிமான விநியோகங்கள் தடைப்பட்டதுடன், முக்கியமான கடல் மார்க்கத் தொடர்புகள் (SLOC) அச்சுறுத்தலுக்கு உள்ளாகி, 2012 இல் மாத்திரம் ஆபிரிக்க முனைப்பகுதி, ஏடன் குடா மற்றும் இந்து சமுத்திர வர்த்தக நடவடிக்கைகளில் அரசாங்கம் மற்றும் கப்பல் நிறுவனங்களுக்கு 7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நட்டம் ஏற்பட்டது.

இந்த அச்சுறுத்தல்களைக் முகாமை செய்யக்கூடிய வகையில் குறைப்பதற்கு கடல்சார் நாடுகள், அவற்றின் கடற்படை, கப்பல் நிறுவனங்களின் கொள்கை மற்றும் செயற்பாடுகளில் மாற்றம், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானம் (1838) என கூட்டு முயற்சி எடுக்கப்பட்டது. ஆனாலும் கடற்கொள்ளை என்பது உலக சமுத்திரங்களில் தொடர்ச்சியான சவாலாக, குறிப்பாக நிலையான அரசாங்கம் அல்லது முறையான கடற்பாதுகாப்பு அற்ற பகுதிகளில் காணப்படுகின்றது.

கடற்கொள்ளை தடுப்பு ரோந்து நடவடிக்கைகளுக்கு நாடுகள் தமது வளங்களை ஒதுக்கியதும், இதனைத் தொடர்ந்து கப்பல் நிறுவனங்கள் தமது கப்பற்பாதைகளை அச்சுறுத்தலுக்கு உள்ளாகிய பாரம்பரிய பாதைகளுக்கு மாற்றி அமைத்ததும், சரக்குக் கப்பல்கள் வருமானம் கூடிய இலக்குகளாக மாறியதுடன், கடற்கொள்ளை மற்றும் ஆயுதக் கொள்ளைகள் என்பன கடலில் ஒரு நடைமுறைச் சிக்கல்களாக உருவெடுத்துள்ளது. இதனை மனதிற் கொண்டு, பரந்த பிரதேசத்தில் வரையறுக்கப்பட்ட வளங்களுடன் வினைத்திறனான கடற்கொள்ளைத் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட, பிராந்திய கடற்படையினர் மற்றும் கடலோரக் காவற்படையினரும் கூட்டாக செயற்பட வேண்டும்.

கிழக்கு இந்து சமுத்திரத்தில் கடற்கொள்ளை தடுப்பு கூட்டுமுயற்சியை சிறந்த உதாரணமாகக் குறிப்பிடலாம். கடந்த 12 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்த இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து கூட்டணி மலாக்கா நீரிணையில் ரோந்தில் ஈடுபடுவதன் மூலம், இந்த ஒடுங்கிய கடற்பகுதியில் கடற்கொள்ளை கணிசமான அளவு குறைந்துள்ளது.

ஏனைய கடல்சார் சவால்களைப் போன்று, எவ்வாறாயினும், உள்நாட்டில் நிலைமைகளை தீர்த்து வைப்பதன் மூலமே கடலில் காணப்படும் கடற்கொள்ளை போன்ற பிரச்சினைகளையும் தீர்த்து வைக்கலாம். சட்ட ஒழுங்கீனம், வறுமை, மற்றும் மனிதாபிமான நெருக்கடிகள் போன்றன கடற்கொள்ளையில் ஈடுபட தூண்டுகோளாக அமையும்.

உள்நாட்டு சட்ட ஒழுங்கீனம் காரணமாக, பயங்கரவாதம், கரையோர எல்லை தாண்டிய பாதுகாப்பு முறைகேடு போன்ற சவால்களை ஏற்படும்.

இதற்கு, இஸ்லாமிய தேசம் (ISIS) அமைப்பை தெளிவான உதாரணமாக குறிப்பிடலாம். அமெரிக்க தலைமையிலான ISIS-எதிர் கூட்டுப்படைகள் புவியியல் ரீதியாக மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்காவை குறிவைத்து, படை நடவடிக்கைகள் மூலம் ISIS கட்டுப்பாட்டுப் பகுதிகளைத் தடுத்தாலும், தாம் வந்த இந்து-ஆசிய-பசுபிக் பிரதேசங்கள் நோக்கித் தப்பித்து செல்லும் தீவிரப் போக்குள்ள ஆயுததாரிகள், அங்கு சென்று புதிய போராளிகளை மனமாற்றம் மூலம் ஈர்ப்பதில் ஈடுபடுகின்றனர்.

தவறுகளுக்கு இடமில்லை; ISIS என்பது வெற்றி கொள்ளப்பட வேண்டிய தெளிவான அச்சுறுத்தல் ஆகும். வன்முறை பற்றிய எண்ணக்கருத்தின் ஆரம்பக் காரணி தெற்கு பிலிபைன்ஸ் நாட்டில் இருந்து உதித்திருப்பது கவலை அளிக்கின்றது. இங்கு தான் இஸ்னிலோன் ஹபிலோன் என்ற அபு சயாப் குழுத் தலைவர், தென்கிழக்காசிய சிற்றரசராக 2016ல் பெயர் சூட்டப்பட்டார். சில மாதங்களிலேயே ஹபிலோன் பல்வேறு தீவிரவாத அமைப்புக்களை ISIS கறுப்புக் கொடியின் கீழ் ஒன்றினைத்துக் கூட்டணியை உருவாக்கினார். இந்தத் தீவிரவாதிகள், மத்திய கிழக்கு மின்டானோவின் மாராவி நகரில் கொலைகளைச் செய்யப் பயன்படுத்திய அதே தாக்குதல் தந்திரோபாயங்களைப் பயன்டுத்துவதுடன், முதற் தடவையாக ISIS இல் அபிமானம் கொண்ட பெரும் எடுப்பிலான படைகள் இந்து-ஆசிய-பசுபிக் பிரதேசங்களில் போராட்டம் நடத்துகின்றன.

சீமான்களே மற்றும் சீமாட்டிகளே, மாராவி சம்பவம் இந்து-ஆசிய-பசுபிக் நாடுகளுக்கு ஒரு விழிப்புணர்வு சமிக்ஞை ஆகும். வெளிநாட்டு போராளிகள் தமது எண்ணக்கருத்து, மற்றும் வளங்களை உள்நாட்டில் பிறந்து வளர்ந்த அடுத்த தலைமுறை தீவிரவாதிகளுக்கு கடத்துகின்றனர். நாம் ISISஐ தடுக்க வேண்டும், புற முனை மூலம் தடுப்பதன் மூலம் ஏற்கனவே உள்ள அச்சுறுத்தலை தீவிரப்படுத்தாது,

நேர் முனையில் தடுக்க வேண்டும். அதை நாம் தனியாக செய்ய முடியாது. இந்த ISIS நோய் பிராந்தியத்தில் மேலும் பரவாத வகையில் நாடுகள் ஒன்றிணைந்து தடுக்க வேண்டும்.

இச் சவால்களை எதிர்கொள்ள பல நாடுகள் இணைந்து முயற்சிகளை மேற்கொள்கின்றன. இந்தோனேசியா, மலேசியா, பிலிபைன்ஸ் ஆகிய நாடுகள் சுலு கடற்பகுதியில் கடற்கொள்ளை மூலம் கப்பம் கோருவதனைத் தடுக்க தமது கூட்டமைப்பை வலுவாக்கி உள்ளன.

இந்த பாரிய மூன்று தேசங்களையும் அவற்றுடன் இணைந்த ஆயிரக்கணக்கான தீவுகளையும் கொண்ட கட்டுப்பாடுகள் அற்ற கடல்சார் பிரதேசங்களை, கூட்டுறவு முயற்சி மூலம் பாதுகாப்பதனால் தீவிரவாதிகள் நடமாட்டம், ஆட்சேர்ப்பு, வருவாய் வழிகளை கட்டுப்படுத்தலாம். பிலிபைன்ஸ் ஆயுதப்படைகளின் பங்குபற்றுதலுடன் இந்த குழுக்களுக்கு எதிராக எடுத்த நடவடிக்கையானது, சரியான பாதையில் எடுத்து வைத்த இன்னொரு அடியாக எடுத்துக்கொள்ளலாம்.

சிங்கப்பூர் மற்றும் இந்தோனேசியா இடையிலான கூட்டுறவு இன்னொரு படிக்கல்லாகும். சிங்கப்பூர் மீது ISIS தீவிரவாதிகளுடன் தொடர்புபட்ட அமைப்பினர் மேற்கொள்ள இருந்த திட்டம், இந்தோனேசிய பாதுகாப்பு படையினரால் முறியடிக்கப்பட்டது.

இந்த உதாரணங்கள், பாதிக்கப்பட்ட நாடுகள் கூட்டுறவு மூலம் அதிகரித்த சவால்களை எதிர்கொள்வது பற்றிய வழிவகைகளைக் காட்டுகின்றது. கூட்டு ரோந்து, கூட்டு இராணுவப் பயிற்சி, நீடித்த ஒத்துழைப்பு ஆகியன கடற்கொள்ளை தடுப்பு, வர்த்தக மற்றும் கப்பற் பாதைகளை பாதுகாத்தல், தீவிரவாதத்தை ஒழித்தல், இயற்கை அனர்த்தத்தின் போது மனிதாபிமான உதவிகளை வழங்குதல் போன்றவற்றுக்கு உறுதுணையாக அமையும். ஐக்கிய அமெரிக்கா குறித்த விடயங்களில் நாம் இணக்கமாக செயற்படக் கூடிய வழிவகைகளை தொடர்ச்சியாக இனங்கண்டு நடவடிக்கை எடுக்கும்.

பிராந்தியத்தின் தொடர்ச்சியான ஸ்தீரணம் மற்றும் செழிப்பான வளர்ச்சிக்கு தேவையான பாதுகாப்பு வழங்கும் கடப்பாடுள்ள எம் போன்றவர்களுக்கு இச்செய்தி தொடர்ந்து ஒலித்துக் கொண்டு இருக்கும்.